DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண். 184/2023**

**அ.சா.–1**

| | |
|---|---|
| பெயர் : திருமதி. சுமதி | கிராமம்: பாரப்பட்டி |
| க/பெ. : திரு. குழந்தைவேலு | தாலூக்கா : சேலம் |
| வயது : 46 | தொழில்: – |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 44 of 1969, this the 27th day of November, 2025.

( 2 முதல் 5 எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்குரைஞர் ஆஜர் )

**முதல்விசாரணை**:–

நான் பாரப்பட்டியில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன குழந்தைவேலு எனது கணவர் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். இவ்வழக்கின் 1ம் எதிரியையும் எனக்கு தெரியும். எனக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளார்கள். என் கணவரை கொலை செய்து விட்டார்கள். அவர் இறந்த காலக்கட்டத்தில் அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுனராக வேலை செய்து வந்தார். எங்களுக்கு விவசாய நிலம் உள்ளது. எதிரிகள் எங்கள் பங்காளிகள் ஆவார்கள். எங்களுக்கும், எதிரிகளுக்கும் இடையே தடம் சம்மந்தமாக அவ்வவ்போது பிரச்சனை இருந்து வந்தது. எங்கள் சொத்தை ஒட்டி எதிரிகளுக்கும் சொத்து உள்ளது. நாங்கள் கூரை வீட்டில் தான் வசித்து வருகிறோம். நாங்கள் குடிசை வீட்டில் இருந்த காரணத்தில் எங்கள் இடத்தில் இருந்த குடிசை வீட்டிற்கு அருகில் மெத்தை வீடு கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தோம். அந்த இடத்திற்கு அருகில் எங்கள் இடத்திற்குள் இரண்டு மின்கம்பங்கள் இருந்தது.

Sd/- R. Velaras,
I Additional District Judge,
Salem

மேற்படி மின்கம்பங்கள் நாங்கள் புதிதாக வீடு கட்டுவதற்கு இடையூறாக இருந்த காரணத்தினால் அதனை வேறு இடத்திற்கு மாற்றி அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தோம். அதனை மாற்றி அமைப்பதற்காக எனது கணவர் மின்வாரியத்திற்கு ரூ.56,000/– பணம் கட்டினார். மேற்படி மின்கம்பங்களை மாற்றி அமைப்பதற்கு மின்வாரியத்தில் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று தடை செய்தார்கள். மின்வாரியத்தினர் அந்த இடத்திற்கு வந்து மின்கம்பங்களை மாற்றி அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தபோதும் எதிரிகள் தடை செய்தார்கள். 30.01.2023 அன்று மாலை சுமார் 05.30 மணியளவில் நானும், எனது கணவரும், எனது பிள்ளைகள் தனுஷ்குமார், மோனிகா, எனது மாமனார் துர்க்கையன், மாமியார் அலமேலு மற்றும் பக்கத்து வீட்டுக்காரர்கள் முத்துசாமி, சக்திவேல் ஆகியோர்கள் அங்கிருந்தோம். அப்போது தமிழ்நாடு மின்வாரியத்தை சேர்ந்தவர்கள் 5 நபர்கள் மேற்படி மின்கம்பங்களை மாற்றி அமைப்பதற்கு உண்டான பணிகளை அங்கு செய்து கொண்டிருந்தார்கள். என்னிடம் காட்டப்படும் ரசீதுதான் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு பணம் ரூ.56,097/– செலுத்தியதற்கான ரசீது ஆகும். அது **அ.த.சா.ஆ–1** ஆகும். மேற்படி வேலை நடந்து கொண்டிருந்தபோது ஆஜர் எதிரிகள் நால்வரும், இறந்துபோன ராஜாவும் அங்கு வந்து தகராறு செய்தார்கள். அவர்கள் மின்கம்பங்களை மாற்ற கூடாது என்று சொன்னார்கள். அதற்கு என் கணவர் எங்கள் சொத்தில் மின்கம்பங்களை மாற்றி அமைக்கிறோம் என்று சொன்னார். எனது கணவர் அவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கும்போதே சின்னுசாமி மகன் 4ம் எதிரி தினேஷ் எனது கணவரின் முதுகில் கையால் அடித்துவிட்டார். 5ம் எதிரி பாண்டியன் எனது கணவரை கன்னத்தில் அடித்துவிட்டார். 1 முதல் 3 எதிரிகளான ராஜா, சின்னுசாமி, கணேசன் ஆகியோர்கள் எனது கணவரை கைகளால் அடித்தும், காலால் எட்டியும் உதைத்தார்கள். அப்போது மின்வாரியத்தினார் வேலை செய்வதற்காக வைத்திருந்த

Sd/- R. Velaras,
I Additional District Judge,
Salem

மண்வெட்டியை 1ம் எதிரி ராஜா எடுத்து இத்தோடு செத்து ஒழிந்துபோடா என்று எனது கணவரை பார்த்து சொல்லி அந்த மண்வெட்டியால் வலது கழுத்தின் பின்பக்கத்தில் ஒரே வெட்டாக வெட்டிவிட்டார். அதனால் என் கணவர் கிழே மயக்கம் போட்டு விழுந்துவிட்டார். நாங்கள் அதனை தடுக்க சென்றோம். ஆனால் எங்களால் தடுக்க இயலவில்லை. எங்களையும் கிழே தள்ளிவிட்டார்கள். எனது கணவரை ராஜா வெட்டிவிட்டதால் நாங்கள் கத்தினோம். எனது கணவரை வெட்டுவதற்கு 1ம் எதிரி பயன்படுத்திய மண்வெட்டியை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல இயலும். இன்று நீதிமன்றத்தில் வைக்கப்பட்டுள்ள மண்வெட்டிதான் அன்றைய தினம் 1ம் எதிரி ராஜாவால் பயன்படுத்தப்பட்ட மண்வெட்டி ஆகும். மேற்படி மண்வெட்டி **அ.த.சா.பொ.1** ஆகும். என் கணவரை 1ம் எதிரி வெட்டியவுடன் அந்த மண்வெட்டியை எடுத்துகொண்டு எதிரிகள் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். அருகிலிருந்தவர்கள் ஆம்புலன்சிற்கு போன் செய்து எனது கணவரை நானும், எனது மகனும் சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தோம். எனது கணவர் பேச இயலாத நிலையில் இருந்தார். அதனால் எனது மகன் கையொப்பம் செய்து எனது கணவரை மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்த்தார். அன்றைய தினம் இரவு சுமார். 08.30 மணியளவில் மல்லூர் போலிசார் சேலம் அரசு மருத்துவமனைக்கு வந்து என்னை விசாரித்தார்கள். எனது கணவர் மயக்கமாக இருந்த காரணத்தினால் என்னை போலிசார் விசாரித்தார்கள். நான் நடந்தவற்றை சொன்னேன். அதனை வாக்குமூலமாக போலிசார் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி புகார் வாக்குமூலம் **அ.த.சா.ஆ-2** ஆகும். அதன்பிறகு ஒரு பெண்போலிஸ் வந்து என்னை விசாரித்தார். 01.02.2023 அதிகாலை சுமார் 01.30 மணியளவில் எனது கணவருக்கு மிகவும் சீரியஸாக இருப்பதாக மருத்துவர்கள் என்னிடம் சொன்னார்கள். பின்னர் எனது

Sd/- R. Velaras,
I Additional District Judge,
Salem

கணவர் இறந்துவிட்டதாகவும் என்னிடம் சொன்னர்கள். எனது கணவர் இறந்தபிறகு மீண்டும் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்குவிசாரணை (எதிரிகள் தரப்பில்)</u>**:–

எதிரிகள் தரப்பு வேண்டுகோளின்பேரில் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது

Sd/- R. Velaras,
I Additional District Judge,
Salem